தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 179 · வெள்ளிக்கிழமை Friday · 25.09.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# பொறுப்புடன் பணியாற்றுங்கள்... வெளிப்படைத்தன்மை மிக முக்கியம்

## மத்திய அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தல்



மக்களுக்குச் சேவையாற்றுவதே நமது முதன்மையான பணியாக இருக்க வேண்டும் என்று பிரதமர்மோடிதெரிவித்துள்ளார்.பொது வாழ்வில் பிரதமர் மோடி 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு, பாஜ சார்பில் 'சேவா சங்கல்ப் அபியான்' திட்டத்தின் ஒரு பகுதியாக மோட்டார் சைக்கிள் யாத்திரை கடந்த செப்டம்பர் 17ம் தேதி துவங்கியது.

குஜராத்தின் வாட்நகரில்இருந்துவாராணாசி வரை பயணிக்கும் 10 குழுக்களைச் சேர்ந்த சேவா யாத்திரீகர்களுடன் பிரதமர்மோடி வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக பேசியதாவது: இந்த சேவா யாத்ரீகர்கள், வத்நகரிலிருந்து வாரணாசி வரை10குழுக்களாக இருசக்கர வாகனப் பேரணியை மேற்கொண்டு வருகின்றனர். இந்த யாத்திரை அடிமட்ட அளவில் பொதுமக்களுடனான தொடர்பு, இளைஞர்களின் ஈடுபாடு, சமூக நலன் மற்றும் கலாசார ரீதியான உறவை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

நற்காரியம்

எவ்வளவு உயர்ந்த அதிகாரத்தையோ அல்லது பதவியையோ அடைந்தாலும், எங்கள் பாதை எப்போதும் சேவையை நோக்கியதாகவே இருக்கும் என்பதை எங்கள் நடத்தை வெளிப்படுத்த வேண்டும். சேவை குறித்து வெறும் உபதேசம் செய்வதை விடுத்து, சேவையாற்றுவதன் மூலமே நமது நோக்கத்தை எடுத்துரைக்க வேண்டும்; உங்கள் பயணத்தின்போது மக்களுக்குச் சேவையாற்றுவதன் மூலம் நீங்கள் ஒரு நற்காரியத்தைச் செய்கிறீர்கள்.

சேவை ஆற்றுங்கள்!

மக்களுக்குச் சேவையாற்றுவதே நமது முதன்மையான பணியாக இருக்க வேண்டும் என்று அனைவருக்கும் கூற விரும்புகிறேன்; சேவை குறித்து வெறும் உபதேசம் செய்யத் தேவையில்லை. சேவை குறித்த செய்தியை வெறும் வார்த்தைகள் மூலம் அல்ல, மாறாகச் சேவையாற்றுவதன் மூலமே நாம் வெளிப்படுத்துவோம்.

2047க்குள்!

நாட்டை உருவாக்கும் இலக்கோடு நாம் களமிறங்கியுள்ளோம். வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் உறுதியுடன் நாம் பயணிக்கிறோம். 2047ம் ஆண்டிற்க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதில், இளைஞர்களின் மிக முக்கியப் பங்கை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இன்றைய இளம் தலைமுறையினர் வளர்ந்த இந்தியாவை உருவாக்குபவர்களாக மட்டுமல்லாமல், அதன் மூலம் மிகப்பெரிய அளவில் பயனடைபவர்களாகவும் இருப்பார்கள்.

இவ்வாறு பிரதமர்மோடிபேசினார்.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல்: தி.மு.க. கூட்டணிக்கு இந்திய தேசிய லீக் கட்சி ஆதரவு



மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு இந்திய தேசிய லீக் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் முதல்அமைச்சர் விஜய் போட்டியிட்ட திருச்சி கிழக்கு உள்ளிட்ட 7 தொகுதிகள் காலியாக உள்ள நிலையில் அதில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் (தனி) சட்டமன்ற தொகுதியில் அடுத்த மாதம் 6-ந்தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இங்கு வேட்பாளர்களாக த.வெ.க. சார்பில் மரகதம் குமரவேல், தி.மு.க. சார்பில் பரந்தா மன், அ.தி.மு.க. சார்பில் கணிதா சம்பத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளர் சுகந்தி,நாம்தமிழர் கட்சி வேட்பாளர் ஜானகிராமன் உள்ளிட்ட 48 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.அவர்களில் 28பேரின் மனுக்கள் ஏற்கப்பட்டது.

அதேபோல் இடைத்தேர்தல் நடைபெறும் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் வேட்புமனு தாக்கல் கடந்த 9-ந் தேதி தாராபுரம் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் தொடங்கியது. கடந்த 16-ந்தேதி வேட்புமனு தாக்கல் முடிந்தது. அதன்படி, த.வெ.க., தி.மு.க., அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு மற்றும் நா.த.க. வேட்பாளர்கள் என மொத்தம் 51 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீதான பரிசீ லனை 17-ந் தேதி நடந்தது. இதில் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் சத்தியபாமா, தி.மு.க. வேட்பாளர் சுகன்யா, அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகா, இந்திய கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளர் லட்சுமணன் உள்பட 22 வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டது. மீதமுள்ள 29 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டது.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் த.வெ.க. கூட்டணி, திமுக, அதிமுக, நாதக, இடதுசாரிகள் என 5 முனைப் போட்டி நிலவுகிறது.

இந்த சூழலில் மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றதொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்படி மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 28 பேரின் மனுக்கள் ஏற்கப்பட்ட நிலையில், சுயேட்சை வேட்பாளர் ஒருவர் வேட்பு மனுவை வாபஸ் பெற்றதால் போட்டியிடும் வேட்பாளர்கள் எண்ணிக்கை 27-ஆக ஆனது. தாராபுரம் தொகுதியில் 14 சுயேட்சை வேட்பாளர்கள் உட்பட 22பேர்போட்டியிடுகின்றனர்.

தற்போது இடைத்தேர்தலு க்கான அனல் பறக்கும் பிரசாரம் நடந்து வருகிறது.

இந்நிலையில் மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு இந்திய தேசிய லீக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்த இந்திய தேசிய லீக் மாநிலத் தலைவர் அல்ஹாஜ் எம். பஷீர் அகமது உள்ளிட்ட நிர்வாகிகள் தி.மு.க. வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவோம் என உறுதியளித்தனர்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தொடர்ந்து 4வது நாளாக தங்கம் விலை சரிவு: பவுனுக்கு ரூ.1,080 குறைவு



சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் தொடர்ந்து நான்காவது நாளாக குறைந்துள்ளது. அந்த வகையில் (செப்.24) தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,080 என்று சரிந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையிலான மோதலின் தாக்கம் உலகபொருளாதாரத்தில் எதிரொலித்து வருகிறது. அது சர்வதேச அளவில் தங்கம் விற்பனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மே மாதம் தங்கம் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. இதோடு கடந்த 1-ம் தேதி அன்று 'தேவையின்றி தங்கம் வாங்காதீர்கள்' என நாட்டு மக்களிடம் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதையடுத்து தங்கம் விலைசந்தையில்ஏற்ற இறக்கத்துடன் விற்பனை ஆகிறது. இந்நிலையில், சென்னையில் தங்கம் விலை நேற்று பவுனுக்கு ரூ.400 என குறைந்தது. கடந்த திங்கள்கிழமை முதல் இன்று வரை (நான்கு நாட்களில்) தங்கம் விலை பவுனுக்குரூ.2,280குறைந்துள்ளது.

இந்நிலையில், சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.135 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,000-க்கு விற்பனையாகிறது. பவுனுக்கு ரூ.1,080 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,12,000-க்கு விற்பனையாகிறது.

சென்னையில் 24 காரட் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,176 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,22,184-க்கு விற்பனைஆகிறது.18காரட் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,080 குறைந்து, ஒரு பவுன் ரூ.94,160-க்கு விற்பனை ஆகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று கிராமுக்கு ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.250-க்கும், கிலோவுக்குரூ.5,000குறைந்து, ஒரு கிலோ ரூ.2,50,000-க்கும் விற்பனை ஆகிறது.

# கல்லிடைக்குறிச்சி ரயில் நிலைய வரலாற்றில் முதல் முறையாக ரயில்வே கோட்ட மேலாளர் ஆய்வு!



திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி ரயில் நிலையத்தில் நடைபெறும் நடைமேடை நீட்டிப்பு பணிகள் மற்றும் தரம் உயர்த்த தேவையான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய (23-09-26) மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் திரு. ஓம் பிரகாஷ் மீனா ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

கல்லிடைக்குறிச்சி ரயில் பயணிகள் நலச் சங்கத்தின் தலைவர் கவிஞர் கல்லிடைக் குயில் உமர்பாருக் தலைமையில், அதன் நிர்வாகிகளான: டி.எம். அப்துல் சமது, சீதாராமன், முகமது ஷரீஃப், வீரப்பபுரம் கார்த்திக், தானிஷ், மோகன், ஷேக் ஆஸாத் மற்றும் சமூக ஆர்வலர் கூடலரசன் ஆகியோர் வரவேற்பு வழங்கினர்.

கீழ்க்கண்ட கோரிக்கை மனு வழங்கப்பட்டன. கல்லிடைக்குறிச்சி ரயில் நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டும். நடைமேடை நீட்டிப்பு பணிகளை உடனடியாக முடித்துத் தர வேண்டும். செங்கோட்டையில் இருந்து கல்லிடைக்குறிச்சி வழியாக சென்னைக்கு தினசரி ரயில் இயக்க வேண்டும். மும்பையில் இருந்து நெல்லை வரை இயக்கப்படும் சாளுக்கியா எக்ஸ்பிரஸ் ரயிலை கல்லிடைக்குறிச்சி வழியாக செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை மனுவாக வழங்கினர்.



மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமலை நாயக்கர் மஹால் அருகே பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதுப்பிக்கப்பட்ட கழிப்பறையை மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோபிக்சன் அவர்கள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார், இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ராஜ் மஹால் துணிக்கடையின் நிர்வாக இயக்குனர் ராஜ விநாயக் கலந்து கொண்டார், மேலும் இந்நிகழ்ச்சியில் தெற்கு வாசல் பகுதி செயலாளர் தவிட்டுசந்தை சிவா, 47 வது வார்டு கழகச் செயலாளர் முகமது இப்ராஹிம் மற்றும் கழக பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக அனைத்து அணி நிர்வாகிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்,

# மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் வாக்கு சேகரிப்பு முன்னாள் வேட்பாளர் எழில் கேத்தரின் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நல்லூர், ஓணம்பாக்கம், காட்டுதேவாத்தூர், நல்லாமூர், உள்ளிட்ட பகுதிகளில் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் முன்னாள் மதுராந்தகம் சட்டமன்ற தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் எழில் கேத்தரின் அவர்கள் சுட்டெரிக்கும் வெயிலில் வீடு வீடாக நடந்து சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.. அப்போது கிராமங்கள் தோறும் மாலை அணிவித்து ஆரத்தி எடுத்தும் மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும் மரகத குமரவேலை ஆதரித்து வேளாண்துறை அமைச்சர் கிராம மக்களிடையே தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்கும் நிலையில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிடும் மரகத குமரவேலை ஆதரித்து நேற்று மதுராந்தகம் அடுத்த பெரும்பாக்கம் கிராமத்தில் அமைச்சர் நேரடியாக சென்று கிராம மக்களின் குறைகளை கேட்டறிந்து விரைவில் சரி செய்யப்படும் எனக்கோரி கிராம மக்களிடையே மரகத குமரவேலுக்கு வாக்கு சேகரித்தார்

அதனைத் தொடர்ந்து பூத் கமிட்டி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார் இதில் மத சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



தூத்துக்குடி மாநகராட்சி அருகே பிரதான சாலை ஓரத்தில் கழிவுநீர் வெளியேறி வருவதால், சாலையோர கடை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அவதியடைந்து வருகின்றனர். கழிவுநீர் பிரச்சினைக்கு மாநகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என வியாபாரிகள் புகார் தெரிவித்துள்ளனர். இதனால் அப்பகுதியில் நடந்து செல்லும் பொதுமக்களும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

# மேல்விஷாரம் மின்வாரிய அலுவலகத்தில் பல்வேறு முறைகேடுகள்? JE சாதிக் பாஷா மீது நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை!




ராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரத்தில் இயங்கி வரும் மின்வாரிய சப்-டிவிஷன் அலுவலகத்தில், இளநிலைப் பொறியாளராக (JE) சாதிக் பாஷா என்பவர் பணியாற்றி வருகிறார். இவர் தலைமையில் இங்கு பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருவதாகப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

புதிய மின் இணைப்பு வழங்குவதற்கு கணிசமான தொகையைக் லஞ்சமாகப் பெறுவதாகவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொண்டதாகப் பொய்க் கணக்கு (Fake Bills) தயாரித்து மின்வாரியப் பணத்தைக் கையாடல் செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட பல பகுதிகளில் புதிய மின் இணைப்பு பெறுவதில் பல்வேறு தடைகளும் முறைகேடுகளும் நடப்பதாகவும், மின்தடைகளைச் சரிசெய்வதில் திட்டமிட்டு காலதாமதம் செய்யப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

குறிப்பாக, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக 'வி.கே.மதின்' தெருவில் மின்சார ஒயர்கள் ஆபத்தான முறையில் தொங்கிக் கொண்டிருந்த நிலையிலும், இதுகுறித்து புகார் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட பாலாற்றங்கரைப் பகுதியில் உள்ள 'சாதிக் பாஷா நகர்' மற்றும் 'எம்.ஜி. ஆர் நகர்' ஆகிய இடங்களில் நீர்நிலைகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருந்த வீடுகள் உயர் நீதிமன்ற உத்தரவின்படி இடித்து தள்ளப்பட்டன. அப்போது அங்கு அமைக்கப்பட்டிருந்த மின்கம்பங்களும், மின் இணைப்புகளும் துண்டிக்கப்படாமல் அப்படியே விட்டுச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது

தற்போது மீண்டும் அதே பகுதியில் வீடுகளைக் கட்டி குடியிருந்து வருபவர்கள், அங்கே இருக்கும் மின்கம்பங்களிலிருந்து சட்டவிரோதமாக மின்சாரத்தைத் பயன்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து JE சாதிக் பாஷாவிடம் கேட்டபோது, "பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்கும்போதுதான் மின்சார இணைப்பைத் துண்டிக்க முடியும்; தற்போது துண்டிக்க முடியாது. மேலும், அப்பகுதியில் வசிப்பவர்கள் இஸ்லாமியர்கள் அதிகமா இருக்கிறார்கள் பயன்பெறட்டும் என விட்டுள்ளோம். எங்களை யாராவது கேட்டால், அங்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி கணக்கை முடித்துவிடுவோம். நீங்கள் எது வேண்டுமானாலும் செய்தி போட்டுக்கொள்ளுங்கள்" என அலட்சியமாகப் பதிலளித்துள்ளார்.

இதனிடையே அப்பகுதி பொதுமக்கள் கூறுகையில், JE சாதிக் பாஷா தங்களிடம் பணம்பெற்றுக்கொண்டுதான் மின்சாரம் எடுக்க அனுமதி அளித்துள்ளதாக அதிர்ச்சி குற்றச்சாட்டைக் கிளப்பியுள்ளனர். தொடர்ந்து பல்வேறு காரியங்களில் இவர் லஞ்சம் பெற்றுக்கொண்டு முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

எனவே, மேல்விஷாரம் பகுதியில் மின்சாரத் திருட்டைத் தடுக்கவும், பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வரும் இளநிலைப் பொறியாளர் சாதிக் பாஷா மீது உரிய துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும் உயர் அதிகாரிகள் உடனடியாக தலையிட வேண்டும் எனச் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

# தூத்துக்குடி வேலவன் ஜுவல்லர்ஸ் தங்க நகை விவகாரம்: தவறு யாராக செய்து இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை ஏ.எம்.விக்கிரம ராஜா பேட்டி



தூத்துக்குடி வேலவன் ஹைப்பர் மார்க்கெட் வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் வேலவன் ஜுவல்லர்ஸ் தங்க நகைக் கடையில் ரூ.1 கோடி பணம் கேட்கப்பட்டதாக எழுந்துள்ள விவகாரம் தொடர்பாக, தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரம ராஜா நேரில் சென்று விசாரித்தார்.

நகைகடை உரிமையாளர் ஆனந்த் மற்றும் மேலாளர் சரவணன் ஆகியோரிடம் விவரங்களைக் கேட்டறிந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு சாதி, மதம் உள்ளிட்ட வேறுபாடுகளைக் கடந்து அனைத்து வணிகர்களையும் ஒரே குடும்பமாகக் கருதி செயல்பட்டு வருகிறது. வணிகர்களுக்கு எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் அவர்களுக்கு ஆதரவாக சங்கம் இருக்கும்.

இந்த விவகாரம் தொடர்பாக சிலர் சமூக வலைதளங்களில் சாதிய ரீதியான கருத்துகளை வெளியிட்டு வருவது கவனத்திற்கு வந்துள்ளதாகவும், பிரச்சினையை சாதிய கண்ணோட்டத்தில் அணுகாமல் வணிகம் தொடர்பான விவகாரமாக மட்டுமே பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில், எந்தவொரு வணிக நிறுவனமும் தவறு செய்திருந்தால், அதையும் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு தட்டிக் கேட்கும். யாராக இருந்தாலும் தவறு செய்திருந்தால், சட்டப்படி முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள சங்கம் வலியுறுத்தும் என்றார்.

மேலும், முத்தூட் பைனான்ஸ் உள்ளிட்ட அடமான நிறுவனங்கள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும், இதுகுறித்து தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு சார்பில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

மேலும் நகைகளை அடகு வைப்பதில் பின்பற்றப்படும் நடைமுறைகள், வசூலிக்கப்படும் வட்டி உள்ளிட்ட விவரங்கள் ஆய்வு செய்யப்படும். அடகு வைத்த நகைகளைத் திருப்பிச் செலுத்துமாறு வாடிக்கையாளர்களுக்கு நிர்பந்தம் செய்யப்படுவதாகக் கூறப்படும் தகவல்கள் குறித்தும் விசாரித்து, உண்மை நிலையை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும் என்று மாநிலத் தலைவர், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு ஏ.எம்.விக்கிரம ராஜா தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு நிர்வாகிகள் மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மதுராந்தம் தொகுதி இடைத்தேர்தல்:

## த.வெ.க. வேட்பாளர் மரகம் குமரவேலை ஆதரித்து கட்சியின் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா வாக்குசேகரிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்களை ஆதரித்து மாண்புமிகு அமைச்சர் ஆதவ் அர்ஜுன் அவர்கள் ஆற்றிய உரை

சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் ஜெயிக்கும் என்று யாராவது எதிர்பார்த்தார்களா? முதல்வராக விஜய் அண்ணன் வருவார் என்று யாருமே சொல்லல. ஆனால் இங்கு இரண்டு பேர் சொன்னார்கள் இளைஞர்கள், பெண்கள் தாய்மார்கள்.

அப்போது மதுராந்தகம் மிஸ் ஆகிவிட்டது. ஏன்னா நம்ம அக்காவுடைய முகம் அப்படி. நீங்க அக்காவுடைய முகத்துக்காக ஓட்டு போட்டீங்க. புரட்சித்தலைவரால் பெயர் வைக்கப்பட்ட அக்கா மரகதம் முகத்துக்காக நீங்க ஓட்டு போட்டீர்கள்.

இந்த தேர்தலில் அக்கா ஒரு லட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் வாங்கியே ஆக வேண்டும். 2 லட்சம் ஓட்டு போடவைக்கிறோம். ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஓட்டு அக்கா வாங்குறாங்க. மீதி இருக்கிற அறுபதாயிரம் ஓட்டுக்கு ரெண்டே ரெண்டு பேருக்கு தான் போட்டி. ஒன்னு பெட்டி பெட்டியா வாங்கின திமுகவுக்கும் இன்னொன்னு அதிமுகவுக்குத்தான். இவர்கள் இரண்டாவது மூன்றாவது இடத்துக்கு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். திமுகவுக்கும் அதிமுகவுக்கும் அன்டர்ஸ்டாண்டிங். மதுராந்தகத்தில் அதிமுக வேலை செய்ததா? திமுகவிடமிருந்து பெட்டியை வாங்கிட்டாங்க.

தாராபுரத்தில் அதிமுக ஜெய்க்கனும்னு திமுக பெட்டி வாங்கிவிட்டது. இதுதான் அவங்களுக்குள்ள இருக்குற பெட்டி. இப்ப இருக்கிற அதிமுக புரட்சி தலைவர் உருவாக்கின அதிமுகவா இல்ல. புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கின அதிமுகவா இல்ல. போன அஞ்சு வருஷமா திமுக-வுக்கு எதிரா எதிர்க்கட்சியா செயல்பட்டாங்களா?

உள்ளாட்சித் தேர்தலில் பாருங்கள் சாதாரண ஆள தான் உள்ளாட்சி தேர்தலில் அண்ணன் தேர்ந்தெடுக்கப் போகிறார். ஆனால் திமுக அப்படியா, நீங்க ஒரு கவுன்சிலர் ஆக முடியுமா? அம்பது லட்சம் கொடு கவுன்சிலர் பதவி கொடுக்கிறேன் என்பான். கட்சி உறுப்பினரா சேர்வதற்கு இரண்டு லட்ச ரூபாய் கேட்பாங்க. கிளைச் செயலாளர் ஆவதற்கு அஞ்சு லட்ச ரூபா கேப்பாங்க.

இதுதான் திமுக. பண்ணையார் கட்சி. யாருக்கு அதிகாரத்தை கொடுக்க மாட்டாங்க.

எம்ஜிஆரால் தொடங்கப்பட்ட அதிமுக இப்போது கிடையாது.

புரட்சித்தலைவி அம்மாவால் வளர்க்கப்பட்ட அதிமுக இப்போது கிடையாது. 2017க்கு அப்புறம் முடிந்து போய்விட்டது.

இன்னைக்கு இரட்டை இலைக்கு போடுற ஓட்டு திமுகவுக்கு போடறதுக்கு சமம். நான் திரும்பியும் பதிவு பண்றேன். இரட்டை இலையும் விசிலும் ஒன்னுதான். சின்னத்தில் இல்லை, அரசியல் அடிப்படையில் இதை நாம் எல்லோரும் உணரலாம்.

அம்மா இருந்த டைம்ல என்ன மாதிரி சிங்கமா இருந்தாங்களோ, புரட்சித்தலைவர் எப்படி கட்சியை பாதுகாத்தாரோ, அதுபோல் இன்னைக்கு தமிழக வெற்றிக் கழகம் திமுகவுக்கு சரியான பதிலடி கொடுத்துக்கிட்டு இருக்கு. இன்றைய தேதியில் திமுகவை எதிர்த்து நிற்கும் ஒரே கட்சி தமிழக வெற்றிக் கழகம்தான். அதனாலதான் பணபலம் இல்லாமல், ஜாதி பலம் இல்லாமல் எல்லாத்தையும் தூக்கிப்போட்டு நம்மளுடைய முதலமைச்சர் மிகப்பெரிய வெற்றி கொடுத்திருக்கார்.

இப்போ எடப்பாடி பழனிசாமியால் போடப்பட்டுள்ள அதிமுகவுடைய வேட்பாளர் அவர்கள், புரட்சித்தலைவி அம்மானால டிஸ்மிஸ் பண்ணப்பட்டவங்க. தூக்கி எறியப்பட்டவங்க. ஆனா அவரை ஐயா இபிஎஸ் ஐயா இன்னைக்கு வேட்பாளரா போடுகிறார். இப்ப இதுல இருந்து தெரியுதா? அம்மா அவர்கள் கட்சியை விட்டு நீக்கினவங்களை தூக்கிட்டு வந்து இன்னைக்கு போட்டு இருக்காங்க.

நமது அனைத்து நிர்வாகிகளும் ஒவ்வொரு வீடா செல்ல வேண்டும். எந்த ஜாதியும் பார்க்காம, எந்த மதமும் பார்க்காம. இங்க இருக்கக்கூடிய தலித் சகோதரர்களாக இருக்கட்டும், எல்லாருமே நமக்கு சகோதரர்கள்தான். தலித் சகோதரர்கள் அம்மா அம்மாதான், வன்னிய சகோதரர் அம்மா அம்மாதான். ஜாதியை மொத தூக்கி போட்டு எல்லாருக்கும் ஒரு வளர்ச்சியை கொண்டு வரணும். இதுதான் நம்ம அண்ணன் விஜய் எங்களிடம் சொல்லிக்கிட்டே இருப்பார். தமிழக வெற்றிக் கழகத்தில் ஜாதி, மதம் பற்றி பேசியிருக்கிறோமா?

மதுராந்தகம் ஒரு வளர்ச்சி அடைந்த தொகுதியா மாறணும். இங்கே இருக்கிற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டும். இதே ஊர்ல எல்லாரும் வேலை பார்க்கணும். வேலைக்காக சென்னைக்கு 100 கிமீ தூரம் வரை வருவதற்கு, இங்கிருந்தே வேலை பார்க்க கூடிய நல்ல தொழில் நிறுவனங்கள் வரணும்,

அதற்கான சூழலுடன் வளர்ச்சியை உருவாக்குவோம்.



ஸ்ரீ யோக சித்தரின் அற்புதங்கள் 2027 ஆம் ஆண்டில் மே மாதம் பெரும்பிழா நடைபெறுகிறது அது சம்பந்தமாக திருமதி நிர்மலா சீதாராம் பினான்ஸ் மினிஸ்டர் அவரை சந்தித்து ஆசி வழங்கினார் ஸ்ரீ யோக சித்தர்



கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகே உள்ள மூங்கில் பாடி கிராமத்தில் கடந்த 20 நாட்களுக்கு மேலாக குடிநீர் இல்லாத நிலையில் பொதுமக்கள் அவதிப்பட்டு வந்தனர். இந்த நிலையில் குடிநீர் கேட்டு அரசு பேருந்து மறித்து சாலை மறியல் செய்தனர்.

## ஈரோடு மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட 9 ஆதரவற்றோர் நபர்களை மீட்டு. உரிய சிகிச்சை அளித்து அவர்களின் சொந்த ஊரான உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு (25.09.2026) அன்று அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள்

### மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சந்தித்து தங்களது நன்றியினை தெரிவித்துக்கொண்டார்கள்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மனநலம் பாதிக்கப்பட்ட 9 ஆதரவற்றோர் நபர்களை மீட்டு. உரிய சிகிச்சை அளித்து அவர்கள் து குடும்பத்தினருடன் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு (25.09.2026) உள்ள சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள். ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சந்தித்து தங்களது நன்றியினை (23.09.2026) அன்று தெரிவித்துக் கொண்டார்கள்.

கடந்த 2 ஆண்டுகளாக மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் யாசகம் பெற்று சாலையோரங்களில் சுற்றி திரிந்த ஆதரவற்ற 9 நபர்களை மீட்டு, அவர்களின் குடும்பங்களை கண்டறிந்து, குடும்பங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டார்கள். இவர்கள் விஜயமங்கலம் சுங்கச்சாவடி அருகே கோயம்புத்தூர் நெடுஞ்சாலை. பகுதியில் உத்தம் தேவ்நாத் (வயது 45), என்பவரையும், ஸ்ரீ வாசவி கல்லூரி, சித்தோடு நெடுஞ்சாலை பகுதியில் திரு.வினோத் (வயது 30) என்பவரையும், ராஜன் தேவிகர் மன்சூராஜ் (வயது 40) என்பவரையும், காஞ்சிக்கோவில் பகுதியில் திருமதி.விமலா (வயது 38) என்பவரையும், நெஞ்சிப்பேட்டை, அம்மாபேட்டை பகுதியில் திருமதி.பண்பந்தர் தேவி (வயது 48) என்பவரையும், பெருந்துறை பேருந்து நிலையம் திருமதி பிரியங்கா குமார (வயது 45) என்பவரையும், பெருந்துறை பேருந்து நிலையம் திரு. பகுரா பாய் (வயது 68) என்பவரையும், ஈரோடு நெடுஞ்சாலை பகுதியில் திரு.ஓமர் (வயது 55) என்பவரையும், கோபிசெட்டிபாளையம் திரு. திவானந்த் (வயது 65) என்பவரையும், ஆகியோரின் நிலையை கண்ட பொதுமக்கள் அட்சயம் அறக்கட்டளைக்கு தகவல் தெரிவித்தனர்.

இவர்களை மீட்டு மறு வாழ்க்கை வழங்கிய நிலையில் முழுமையாக குணமடைந்த இந்த 9 நபர்களை அவர்களின் சொந்த ஊர்களுக்கு 25.09.2026 அன்று இரயிலில் அட்சயம் அறக்கட்டளையின் தன்னார்வலர்கள் உதவியுடன் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் துறை தலைவர் ஆகியோரின் உதவியுடன் அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள். இந்நிகழ்வில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலர் சங்கர்கணேஷ், அட்சயம் அறக்கட்டளை நிறுவனர் நவீன்குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தூத்துக்குடியில் நகர பணிமனை நடத்துனர் தற்கொலை முயற்சி: கிளை மேலாளர் மீது நடவடிக்கை கோரி சிஐடியு கண்டன ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி அரசு போக்குவரத்துக் கழக நகர பணிமனையில் நடத்துனர் ஆறுமுகம் விஷம் அருந்தி தற்கொ-



லைக்கு முயன்ற சம்பவத்தைக் கண்டித்தும், இதற்கு காரணமாகக் கூறப்படும் கிளை மேலாளர்சுரேஷ்மீதுதுறை ரீதியான நடவடிக்கை எடுக்கக் கோரியும் சிஐடியு சார்பில் தூத்துக்குடியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி நகர பணிமனையில் நடத்துனராகப் பணியாற்றி வரும் ஆறுமுகத்தை, பணிமனை மேலாளர் சுரேஷ் அநாகரிகமாகப் பேசி மிரட்டி மன உளைச்சலுக்கு ஆளாக்கியதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து ஆறுமுகம் பணிமனையிலேயே விஷம் அருந்தி தற்கொலைக்கு முயன்றதாகவும், தற்போது ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக கிளை மேலாளர் சுரேஷ் மீது காவல்துறையினர் எப்.ஐ.ஆர். பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட கிளை மேலாளர் மீது அரசு போக்குவரத்துக் கழக நிர்வாகம் உடனடியாக துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, தூத்துக்குடி அரசு போக்குவரத்துக் கழக மண்டல பொது மேலாளர் அலுவலகம் முன்பு சிஐடியு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மத்திய சங்க உதவி செயலாளர் MK. வினேத் தலைமை வகித்தார். சிஐடியு பொதுச்செயலாளர் S. ஜோதி தொடக்க உரையாற்றினார். தூத்துக்குடி புறநகர் பணிமனை தலைவர் S. ராமசாமி, செயலாளர் S. சிவசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிஐடியு மாவட்ட தலைவர் R. பேச்சிமுத்து, REWA மாநில சம்மேளன துணைச் செயலாளர் S. பெருமாள், சிஐடியு மண்டல தலைவர் D. காமராஜ், துணைத் தலைவர் P. குமரகுருபரன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

மாவட்ட செயலாளர் R. ரசல் நிறைவுரையாற்றி னார். பொருளாளர் S. சங்கிலிபூதத்தான் நன்றியுரை கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள் S. அந்தோணிசார்லஸ், K. சிவக்குமார், D. ஜோன்ஸ்ஸ்டுவர்ட்சுனராஜ், S. சிவசுப்பு, K. இராமன், K. காளிதாஸ், K. மனோகரன், C. சந்திரன், V. முத்துராஜ் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தொழிலாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் அடுத்த 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் நாளை (செப்.25) முதல் 6 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று முன்தினம் இரவு 11 மணி தொடங்கி நேற்று அதிகாலை 1 மணி அளவில் இடையே கலிங்கப்பட்டினத்துக்கு மிக அருகில் கரையை கடந்துள்ளது.

தமிழகத்தில் நாளை (செப்.25) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரியிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

செப்.26-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். செப்.27 முதல் 30-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (செப்.25) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கோவை மாவட்டம் சின்னக்கல்லார். பாலமோர், தேனி மாவட்டம் பெரியாறு ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

# மதுராந்தகம் தேர்தல் பொறுப்பாளர்கள் மற்றும் பூத் முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேச்சு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மரகதம் குமரவேல் காசு வாங்கிக் கொண்டு ராஜினாமா செய்ததாகதிமுகசொல்கிறது. ஆனால், திமுகதான் இபிஎஸ் அதிமுகவோடு கைகோர்த்து மக்கள் தீர்ப்பை திருட பார்த்தார்கள். நாம் அல்ல! தற்போது இருப்பது இபிஎஸ் அதிமுக. உண்மையாகவே அது புரட்சித்தலைவர் உருவாக்கின அதிமுக அல்ல. புரட்சித்தலைவி அவர்கள் பாதுகாப்பில் வளர்ந்த அதிமுக அல்ல.

முன்னாள் அமைச்சர் சம்பத் போன்ற செல்வாக்குமிக்க தலைவர்கள் அதிகமுக கொள்கையை அடமானம் வைத்ததற்கு எதிராக கிளர்ந்து நம்மோடு வரும்போது, அதேபோல் அக்கா மரகதம் குமரவேல் வருவதில் என்ன தவறு இருக்கிறது.

2026 தேர்தலுக்கு முன்பு நம்ம அண்ணன் விஜயை குறைத்து மதிப்பிட்டார்கள். கூட்டணி இருந்தா போதும், ஒவ்வொரு தொகுதிக்கும் 40 கோடி ரூபாய் செலவு பண்ணினா போதும் என்று நம்பினார்கள்.

ஆனால், அவர்கள் மக்களை நம்பவில்லை. இளைஞர்கள், பெண்களை நம்பவில்லை. திமுக நம்பினது கூட்டணிக் கட்சி. இன்னொன்னு பணப்பலம். கூட்டணிக் கட்சிகளை கூடநம்பல.பணபலத்தை தான் நம்பினார்கள். திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருக்கும்போது என்ன மாதிரி அவமானப்படுத்தினார்கள் என்று காங்கிரஸ் தோழர்களுக்கு தெரியும்.

2026 தேர்தல் வெற்றிக்கு காரணம் நம்முடைய தலைவர் சாதியும் பாக்கல, மதத்தையும் பாக்கல. இதுதான் தேர்தலில் முதல் வெற்றி. அதற்குப்பிறகு மக்களோடு மக்களாக மக்களுக்கான அரசை நடத்தி வருகிறோம்.எங்களுக்கு அதிகார தோரணை கிடையாது, முதலமைச்சருக்கும் கிடையாது.

திமுக தேர்தலுக்கு முன்பு ஒரு சூழ்ச்சி பண்ணினது. நம்ம தலைவருக்கு வரும் கூட்டத்தை பார்த்து அன்றைக்கு திமுக உணர்ந்துவிட்டது. இவரை வெளியே விட்டு பிரச்சாரம் பண்ணினாள் நமக்கு 200 தொகுதி அல்ல, டெபாசிட் கூட கிடைக்காது என்று அன்னைக்கேபுரிந்துகொண்டார்கள். அதனால்தான் கரூருக்கு பிறகு எஸ்ஓபியை போட்டு எந்த இடத்திலையும் காவல்துறை பிரச்சாரம் பண்ண விடவில்லை.

இத்தனை காலமாக வட மாவட்டம் திமுக என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இனி ஒட்டுமொத்த வட மாவட்டங்கள் தமிழக வெற்றி கழகத்தான்.

எங்களுக்கு எல்லோரும் சமம். எங்க முதலமைச்சர் ஏழ்மையை ஒழிக்கணும் என்று நினைக்கிறார். போன ஆட்சியிலே ஏழ்மையை உருவாக்கி இருந்தார்கள். இவர்கள்தான் படிக்கணும், அவர்கள் தான் படிக்கணும் என்று கல்வி, பொருளாதாரத்தில் பணக்ககாரன் - ஏழை என பெரிய பாகுபாடு நிலவியது.

ஆனால், இப்போ இங்க தண்ணி சரியில்லை, ரோடு சரியில்லை என்று எ.வ.வேலு பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்.ஐந்து வருஷம் ஆட்சியில் இருந்தது நீங்க. ஐந்து வருஷம் அமைச்சராக இருந்தது நீங்க. இதை எப்போது உணரப்போகிறீர்கள்.

நம்ம முதலமைச்சரின் நான்குமாத செயல் திட்டங்கள் மூலம் மாபெரும் வெற்றி கிடைக்கும். நீங்க பயப்படவே பயப்படாதீங்க.

நம்ம அண்ணன் சமூக நீதிக் கணக்கெடுப்பை நடத்த உத்தரவிட்டுள்ளார். இது பெரிய வெற்றி இல்லையா? இது பெரிய வரலாறு இல்லையா? இதை வீழ்த்துவதற்கு நிறையபேர் இங்கேவருகிறார்கள். ஜாதிவாரி கணக்கெடுப்பை திமுக ஏன் நடத்தவில்லை என்று மக்களிடம் நீங்கள் கேளுங்கள்.

வட மாவட்டங்களில் இருக்கிறகரும்புவிவசாயிகளுக்காக குறைந்தபட்ச விலையை அதிகமாக கொடுத்தது யார்? விவசாயி களுக்கான அரசான நாம்தான். இரண்டு தொகுதியிலும் ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் நாம் வெற்றி பெற வேண்டும். காசு கொடுத்து ஜெயிக்கிறது ஒரு வெற்றியே கிடையாது.மக்களும் பெண்களும் எல்லோரும் சேர்ந்து ஓட்டு போட்டு கிடைப்பதுதான் உண்மையான வெற்றி.



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சத்யபாமாவை ஆதரித்து, ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் K.K. ஆனந்த் மோகன் வீடு வீடாகச் சென்று, தமிழ்நாடு அரசின் சாதனைகளை எடுத்துரைத்து, விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் கேட்டுக்கொண்டார்.மேலும், முதலமைச்சரின் மக்கள் சந்திப்பு நடைபெறும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளையும் பார்வையிட்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளி மாணவ, மாணவியர்களிடையே டெங்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி, தலைமையில் (23.09.2026) அன்று நடைபெற்றது.

# விஜயதசமி நாளில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை: தொடக்கக் கல்வி இயக்குநர் உத்தரவு



தமிழ்நாட்டில் விஜயதசமிபண்டிகைநாளன்று அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் புதிய மாணவர் சேர்க்கைக்கான சிறப்பு முகாம்களை நடத்த தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநர் அதிகாரப்பூர்வமாக உத்தரவிட்டுள்ளார்.

வழக்கமாக விஜயதசமி திருநாள் அன்று அரசு பொதுவிடுமுறை அளிக்கப்படும். எனினும், அன்றைய தினம் தங்களது குழந்தைகளுக்கு முதன்முதலாக எழுத்து அறிவித்து (வித்யாரம்பம்) பள்ளியில் சேர்க்க பெற்றோர்கள் ஆன்மிக ரீதியாகவும், பாரம்பரிய ரீதியாகவும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். பொதுமக்களின் இந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கிலும், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையிலும் இந்த சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடக்கக் கல்வி இயக்ககம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள அந்தச் சுற்றறிக்கையின் முழு விவரம்:- பள்ளிகள் திறப்பு -சேர்க்கை

விஜயதசமி பொது விடுமுறை நாளாக இருந்தாலும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் எல்.கே.ஜி (LKG), யு.கே.ஜி (UKG) மற்றும் முதலாம் வகுப்பிற்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காகப் பள்ளிகள் அனைத்தும் திறக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் இன்று (வியாழக்கிழமை)மிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்ககம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அன்றைய தினம் கண்டிப்பாக பள்ளிக்கு வருகை தந்து, மாணவர் சேர்க்கை பணிகளைத் தொடங்க வேண்டும். புதிய மாணவர் சேர்க்கையின் போது, அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படும் தரமான கல்வி, சீருடைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் மதிய உணவு போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து பெற்றோர்களுக்கு ஆசிரியர்கள் விரிவாகஎடுத்துக்கூறவேண்டும்.இந்த தகவலைவட்டாரக்கல்வி அலுவலர்கள் வாயிலாக உடனடியாக பள்ளிகளுக்கு தெரியப்படுத்தி, இதற்கான உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைக் கண்காணிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த சிறப்பு ஏற்பாட்டின் மூலம், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளும் மங்களகரமான விஜயதசமி நாளில் அரசுப் பள்ளிகளில் தங்களது கல்விப் பயணத்தை மிக எளிய முறையில் தொடங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# “இடைத்தேர்தலில் தவெக வேட்பாளர்கள் வெற்றி பெறக் கூடாது”

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பெ.சண்முகம் பேச்சு



திருவள்ளூர்: "தேர்தல் முடிவுகள் வந்த 20 நாட்களில் பொறுப்பற்ற முறையில் ராஜினாமா செய்தவர்கள் மீண்டும் இடைத்தேர்தலில் வெற்றி பெறக் கூடாது" என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "இடைத்தேர்தலில் இடதுசாரிகள் தனித்து போட்டியிடுகிறோம். தேர்தல் முடிவுகள் இடதுசாரிகளுக்கு ஆதரவாக அமையும் என்பதுதான் எங்கள் எதிர்பார்ப்பு.

கம்யூனிஸ்ட் கட்சிகள் இப்போது எந்தக் கூட்டணியிலும் இல்லை. நாங்கள் அரசுக்கு ஆதரவு மட்டுமே கொடுக்கிறோம். இடதுசாரிகள் இணைந்து செயல்படுகிறோம். தேர்தல் முடிவுகள் வந்த 20 நாட்களில் பொறுப்பற்ற முறையில் ராஜினாமா செய்தவர்கள் மீண்டும் இடைத்தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என வாக்கு கேட்டு வருகிறார்கள்.

எதற்கு ராஜினாமா செய்தனர், மீண்டும் ஏன் சட்டமன்ற உறுப்பினர் ஆக வேண்டும் என நினைக்கிறார்கள். இது தான் என் கேள்வி. பொறுப்பற்ற முறையிலும், நெறிமுறை தவறியும் அவர்கள் நடந்து கொண்டுள்ளனர்.

மக்கள் அவர்களுக்கு வாக்களிக்க கூடாது. தவெக வேட்பாளர்கள் எக்காரணம் கொண்டும் மீண்டும் வெற்றி பெறக் கூடாது. அப்படி அவர்கள் தப்பித் தவறி மீண்டும் வெற்றி பெற்றால் திமுக, அதிமுகவில் இருந்து பலரும் ராஜினாமா செய்வதும், இடைத்தேர்தல் வருவதும் பின்னர் அவர்கள் தவெகவில் இணைவதும் நடக்கும். எனவே, இந்த இரண்டு வேட்பாளர்களும் தோற்கடிக்கப்படவேண்டும் என்பதுதான் இந்தத் தேர்தலின் முதன்மையான கடமை.

அரசுக்கு ஆதரவு தெரிவிக்கிறோம். அதே வேளையில், 4 மாத காலத்தில் தவெக அரசை எதிர்த்து கூடுதலாக போராடிய ஒரு கட்சியை சொல்லுங்கள். உடன்படுகிற விசியத்தில் ஆதரிக்கிறோம். முரண்படுகிற விஷயத்தில் எதிர்க்கிறோம்.இந்த அணுகுமுறை தொடரும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கோவை விமான நிலையத்தில் 3 நிமிடங்களுக்கு மேல் வாகனம் நிறுத்தினால் ரூ.500 அபராதம்!




கோவை விமான நிலையத்தில் பயணிகளைஅழைத்துச்செல்ல வரும் வாகனங்களை 3 நிமிடங்களுக்கு மேல் நிறுத்தினால் ரூ.500 அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த நடைமுறைக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. விமான நிலையத்துக்கு வரும் பயணிகளை அழைத்துச் செல்லும் கார்கள் உள்ளிட்ட வாகனங்களை குறிப்பிட்ட நேரத்துக்குள் அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. 3 நிமிடங்களுக்கு மேல் வாகனங்களை நிறுத்தினால் ரூ.500 அபராதம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இதனை ஏற்க மறுக்கும் சிலர்,பார்க்கிங் ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதாக புகார் எழுந்துள்ளது. மேலும், ஒரு சிலர் ஊழியர்களை தாக்குவதாகவும் கூறப்படுகிறது. வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. விமான நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் ஊழியர்களிடம் தகராறு செய்வதையும், தாக்குதலில் ஈடுபடுவதையும் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. விமான நிலையத்தில் அமல்படுத்தப்பட்டுள்ள பார்க்கிங் விதிகளை பின்பற்றி, ஊழியர்களுடன் வாக்குவாதம் மற்றும் மோதலில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# Rift, dissent and more: The many Election Commission controversies over the years

*The latest ECI controversy is not new: the poll panel has faced scrutiny under successive governments over internal rifts and alleged overreach.*

*India's three-member poll panel finds itself embroiled in a controversy amid speculations of rift between chief election commissioner Gyanesh Kumar (CEC) and two election commissioners Sukhbir Singh Sandhu and Vivek Joshi. After a news report that Sandhu and Joshi had objected to certain key decisions of the Election Commission of India (ECI), including those related to the contentious Special Intensive Revision (SIR) process, opposition parties called for Kumar's resignation and the Supreme Court's intervention, also questioning the integrity of the poll process.*




*The poll body rejected charges of one-sided decision-making, saying differences are part of the deliberation process but all ECI decisions are unanimous. The ruling Bharatiya Janata Party (BJP) distanced itself from the controversy.*

*It's not the first time ECI is in the eye of the storm. In its journey through successive governments–from a one-member commission to three members and beyond– the poll panel and some of India's CECs have drawn constant scrutiny over allegations of internal rift and overreach.*

*The TN Seshan episode*

*One of the major controversies broke out in the 1990s, when TN Seshan was the CEC. Previously, the Election Commission had traditionally functioned as a one-member body, with the CEC effectively exercising the institution's authority.*

*Two election commissioners were appointed in October 1989, but the arrangement lasted only until January 1990. The commission returned to a single-member structure until 1993. Then the Narasimha Rao government appointed MS Gill and GVG Krishnamurthy as election commissioners.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.